www.ecourtsindia.com

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.257/2024

P.W.11 (L.W.2)

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் |
| தந்தை பெயர் | : | சொக்கலிங்கம் |
| கிராமம் | : | 4/46, குடித்தெரு, உஞ்சனை அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் |
| வட்டம் | : | |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 44 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 22.04.2025.

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

(சாட்சியின் அடையாளமாக அவரது ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது. அந்த அட்டை எண்.521919711115).

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் இன்றிலிருந்து 4, 5 வருடங்களுக்கு முன்பு காலை 10 மணியில் இருந்து 11 மணிக்குள் எங்கள் ஊரை சேர்ந்த பாலுச்சாமி என்பவருடன் இலுப்புலி ரோட்டில் இருந்து உஞ்சனை பஸ் ஸ்டாப் இருக்கும் மெயின் ரோட்டிற்கு நாங்கள் வந்து கொண்டிருந்த போது இருசக்கர வாகனத்தில் ஒருவர் அங்குள்ள கோவில் பக்கத்தில் உள்ள ரோட்டில் இருந்து வந்து ரோட்டை கடந்த போது திருச்செங்கோட்டில் இருந்து நாமக்கல் நோக்கி வந்த ஒரு கண்டெய்னர் லாரி வேகமாக வந்து அவர் மீது மோதிவிட்டது. இருசக்கர வாகனத்தில் வந்தவர் தூக்கி கீழே வீசப்பட்டு கிடந்தார். நானும், பாலுச்சாமியும் அருகே ஓடிச்சென்று பார்த்தோம். அவருக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்தது. ஆம்புலன்சு வரவழைத்து அவரை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். கண்டெய்னர் லாரியை ஓட்டி வந்து விபத்தைஏற்படுத்திய ஓட்டுநரை நான் பார்த்தேன். அவர் அங்கு தான் இருந்தார். அவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். (வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் இன்று

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-4.pdf

www.ecourtsindia.com



ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது). இந்த சம்பவம் குறித்து திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் பாலுச்சாமி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சத்தம் கேட்டு தான் நான் போய் பார்த்தேன் என்றால் சரியல்ல. அவரது வாகனத்தை இடிக்கும் போது நான் பார்த்தேன். ரோட்டை கடந்து செல்லும் போது தான் விபத்து நடந்ததா என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் ரோடை கடக்கும் போது லாரி வந்து மோதியது. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பாதிக்கப்பட்டவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2025.04.22 17:32:32 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-4.pdf

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.257/2024

P.W.12 (L.W.17)

| | | |
|---|---|---|
| பெயர் | : | வரதராஜ் |
| தந்தை பெயர் | : | பொன்னுசாமி |
| கிராமம் | : | 4/461, எஸ்.எஸ் நகர், குமரமங்கலம் அஞ்சல், திருச்செங்கோடு |
| வட்டம் | : | |
| தொழில் | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 53 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 22.04.2025.

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

(சாட்சியின் அடையாளமாக அவரது ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது. அந்த அட்டை எண்.491324615575).

முதல் விசாரணை :–

நான் தற்போது திருச்செங்கோடு நகர காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 24.08.2021ம் தேதி திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மதியம் 1.30 மணிக்கு திருச்செங்கோடு வட்டம் உஞ்சனை கிழக்கு தோட்டத்தை சேர்ந்த பொன்னுசாமி மகன் பாலுச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.443/2021, சட்ட பிரிவுகள் 279, 337 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அலுவலக நகலை தற்போது வழக்கு கோப்பில் இருந்து நான் தாக்கல் செய்கிறேன். அரசு தரப்பில் குறிப்பாணையின் படி அந்த முதல் தகவல் அறிக்கையின் அலுவலக நகல் **அ.த.சா.ஆ.5/அ.சா.12** ஆகும் (நீதிமன்ற கோப்பில் உள்ள முதல் தகவல் அறிக்கையில் எனது கையெழுத்து போடப்படவில்லை). அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு ஆய்வாளர் உத்தரவு படி

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-4.pdf

வழக்கை நான் புலன்விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 2.30 மணிக்கு சம்பவயிடமான திருச்செங்கோடு – நாமக்கல் ரோட்டில் உஞ்சனை பஸ் ஸ்டாப்பிற்கு சென்று அந்த இடத்தை சாட்சிகள் வேலுமணி, முருகேசன் ஆகியோர் முன்பாக பார்வையிட்டு அ.த.சா.ஆ–2 ஆன பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6/அ.சா.12** ஆகும். சம்பவயிட சாட்சிகளான பாலுச்சாமி, முத்துக்குமார், முருகேசன், மாரிமுத்து மகன் முருகேசன், வேலுமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் 26.08.2021ம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட TN 34 AC 8591 என்ற கண்டெய்னர் லாரியை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே ஆய்வு முடித்ததால் அவரிடம் இருந்து ஆய்வறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பெற்ற கண்டெய்னர் லாரிக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.7/அ.சா.12** ஆகும். (அரசு தரப்பில் 294(3) பிரிவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அ.தசா.ஆ.7 ஆவணம் எதிரி தரப்பு வழக்கறிஞர் சம்மதத்துடன் குறியீடு செய்யப்பட்டது). 27.08.2021ம் தேதி விபத்தில் காயம்பட்ட தாமோதரன் (46) என்பவர் இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவல் அறிக்கையின் பேரில் சட்ட பிரிவினை 279, 337லிருந்து 279, 304(A) ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.8/அ.சா.12** ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த இடமானது திருச்செங்கோடு – நாமக்கல் மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் சாலையின் நடுவே தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபர் வட புறம் குறுக்கு சாலையில் இருந்து மெயின் ரோட்டிற்கு வந்து பிரதான சாலையை வடபுறத்தில் இருந்து தென்புறமாக சாலையை குறுக்காக கடக்க முயற்சித்த போது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சம்பவயிடத்திற்கு போகவில்லை

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-4.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com



என்றாலும், எந்த சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் எந்தவொரு ஆவணமும் தயாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S
Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2025.04.22 17:32:41 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-4.pdf